සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / *All Rights Reserved*

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department Of Education – Western Province**

දෙවන වාර ඇගයීම
இரண்டாம் தவணை பரீட்சை - 2018
**Second Term Evaluation**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 10 | විෂයය / பாடம் / Subject: **கணிதம்** | පත්‍රය / வினாத்தாள் / Paper: II | කාලය / காலம் / Time: மணி 03 |

◈ **பகுதி A இலிருந்து 5 வினாக்களுக்கும் பகுதி B இலிருந்து 5 வினாக்களுக்கும் விடையளிக்க.**

◈ **ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வீதம் இவ்வினாத்தாளுக்கு மொத்தமாக 100 புள்ளிகள் வழங்கப்படும்.**

## பகுதி - A

**5 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**

**01. (a)** ஆண்டுப்பெறுமானம் ரூ.18 000 ஆக மதிப்படப்பட்ட வீடொன்றுக்கு நகரசபையானது 12% இறைவரியை அறவிடுகின்றது. வீட்டின் உரிமையாளர் காஞ்சனா அவ்வீட்டை ரூ.10 000 மாதாந்த வாடகைக்கு சுமிக்கு வழங்கியுள்ளார்.

**(i)** உரிமையாளர் காஞ்சனா அவ்வீட்டிற்காக நகரசபைக்கு செலுத்த வேண்டிய ஆண்டு இறைவரியைக் காண்க.

**(ii)** வீட்டை வாடகைக்கு வழங்குவதன் மூலம் காஞ்சனா பெறும் ஆண்டு வருமானத்தைக் காண்க.

**(iii)** வாடகைப்பணத்திலிருந்து ஆண்டு இறைவரியையும் வீட்டை பராமரிப்பு செய்வதற்காக ரூ.10 000 ஐயும் செலவு செய்த பின் காஞ்சனாவிடம் எஞ்சியுள்ள தொகையைக் காண்க.

**(b)** 12% எளிய வட்டிக்கு ஒரு தொகைப்பணத்தைக் கடனாகப் பெற்ற சாரங்கன் 3 வருட முடிவில் ரூ.2160 ஐ மொத்த வட்டியாக செலுத்தினார். எனின், அவர் கடனாகப் பெற்ற தொகையைக் காண்க.

**02.** $y = 2x^2 - 9$ எனும் வரைபை வரைவதற்கு பூரணமற்ற அட்டவணையொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| $x$ | $-3$ | $-2$ | $-1$ | $0$ | $1$ | $2$ | $3$ |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | $9$ | .......... | $-7$ | .......... | $-7$ | $-1$ | $9$ |

**(i)** அட்டவணையின் இடைவெளிகளை நிரப்புக.

**(ii)** பொருத்தமான அளவிடையில் சார்பின் வரைபை வரைக.

**(iii)** சார்பின் இழிவுப்பெறுமானத்தைக் காண்க.

**(iv)** சமச்சீரச்சின் சமன்பாட்டை எழுதுக.

**(v)** சார்பு நேராக குறையும் $x$ இன் பெறுமான வீச்சை எழுதுக.

**03.** பெட்டியொன்றில் சிவப்பு மற்றும் நீல நிறமான பந்துகள் உள்ளன.

- சிவப்பு நிறப்பந்துகளின் இரு மடங்குடன் நீலப்பந்துகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்கைக் கூட்டும் போது 37 பெறப்படும்.
- சிவப்பு பந்துகளின் எண்ணிக்கையின் நான்கு மடங்கிலிருந்து நீலப்பந்துகளின் இரு மடங்கை கழிக்கும் போது 18 பெறப்படும்.
- சிவப்பு நிறப்பந்துகளின் எண்ணிக்கையை $x$ எனவும் நீல நிறப்பந்துகளின் எண்ணிக்கையை $y$ எனவும் கொண்டு,

**(i)** $x,y$ இலான ஒருங்கமை சமன்பாட்டுச் சோடியை உருவாக்குக.

**(ii)** சமன்பாடுகளைத் தீர்த்து சிவப்பு , நீல நிறப்பந்துகளின் எண்ணிக்கையை தனித்தனியே காண்க.

**(iii)** பெட்டியிலுள்ள பந்துகளின் எண்ணிக்கையில் $\frac{1}{3}$ பங்கு பந்துகளை எடுத்து பை ஒன்றினுள் இட்டு மேலும் அதனுள் **a** எண்ணிக்கையிலான பந்துகளையும் சேர்த்த பின் மொத்த பந்துகளானது எண்ணிக்கையில் **p** ஆக காணப்பட்டது. இத்தகவல்களை தொடர்புபடுத்தும் சமன்பாட்டை எழுதுக.

**04.** செவ்வகம் **ABCD** இல் $AB = (2x + 1)$cm வும் $BC = (x + 2)$cm ஆகவும் காணப்பட அதன் பரப்பளவானது $77 \text{ cm}^2$ ஆயின் **AB** இன் நீளத்தைக் காண்க.

**05.** தோட்டமொன்றில் காணப்பட்ட 30 தென்னை மரங்களிலிருந்து பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை தொடர்பான அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

(இங்கு 6 – 10 என்பது 6 அல்லது அதனிலும் அதிகம் 10 இலும் குறைவு என்பதாகும்)

| வகுப்பாயிடை (தேங்காய்களின் எண்ணிக்கை) | மீடிறன் *(f)* மரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 6 – 10 | 5 |
| 10 – 14 | 8 |
| 14 – 18 | 10 |
| 18 – 22 | 4 |
| 22 – 26 | 3 |

**(i)** $x$ ஆனது நடுப்பெறுமானமாக காணப்பட இடை= $\frac{\Sigma fx}{\Sigma f}$ என்பதைப் பயன்படுத்தி மரமொன்றில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கையை கிட்டிய முழு எண்ணில் காண்க.

**(ii)** தோட்டத்தில் பறிக்கப்படக்கூடிய தேங்காய்களின் குறைந்தபட்ச எண்ணிக்கையானது 350 இலும் கூடுதலாக காணப்படும் என்பதை காரணங்களுடன் விளக்குக.

**06.** கனவுரு வடிவான நீர்த்தாங்கியொன்றின் உட்பகுதியின் நீள,அகல, உயரங்கள் முறையே **5m,4m,3m** ஆகும்.

**(i)** தாங்கியின் கொள்ளளவை லீற்றரில் காண்க.

**(ii)** இந்நீர்தாங்கிக்கு நிமிடத்துக்கு **350*l*** எனும் வீதத்தில் நீர் வழங்கப்படும் அதேவேளை தாங்கியிலிருந்து மற்றொரு தாங்கிக்கு நிமிடத்துக்கு **300*l*** எனும் வீதத்தில் நீர் கடத்தப்படுகிறது. ஆரம்பத்தில் முதலாவது தாங்கி வெறுமையாகவுள்ள போது இவ்விரு குழாய்களும் ஒன்றாக திறக்கப்படின் தாங்கி முற்றாக நிரம்ப எடுக்கும் நேரத்தைக் காண்க.

**(iii)** தாங்கி நிரம்ப ஆரம்பித்து 45 நிமிடங்களின் பின்னர் தாங்கியில் எவ்வளவு உயரத்திற்கு நீர் நிரம்பியிருக்கும் எனக்காண்க.

## <u>பகுதி -B</u>

**5 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**

---

**07.** நகரங்களுக்கிடையில் பிரயாணம் செய்யும் புகையிரதம் ஒன்றின் தூர- நேர வரைபு காட்டப்பட்டுள்ளது.




**(i)** புகையிரதம் பயணம் செய்த முழுத்துாரத்தைக் காண்க.

**(ii)** பிரயாணத்தை நிறைவு செய்வதற்கு எடுத்த காலத்தைக் காண்க.

**(iii)** புகையிரதம் AB , BC , CD ஆகிய நகரங்களுக்கிடையே பிரயாணம் செய்த வேகங்களை km/h இல் தனித்தனியே காண்க.

**(iv)** புகைவண்டியின் சராசரிக் கதியைக்காண்க.

**08.** **(i)** பெறுமானம் காண்க. $\log_{10} 25 + \log_{10} 4 - 1$

**(ii)** தீர்க்க. $\log_2 x = \log_2 5 + \log_2 4$

**(iii)** மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க.

$$232.5 \times 12.4$$

**09.** நேர்விளிம்பு கவராயம் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தியும் அமைப்புக் கோடுகளை தெளிவாகக் காட்டியும்,

**(i)** PQ = 7 cm ஆகுமாறு நேர்கோட்டுத்துண்டத்தை அமைக்க.

**(ii)** QR = 6 cm வும் $P\hat{Q}R = 120^\circ$ ஆகுமாறு $P\hat{Q}R$ அமைக்க.

**(iii)** PQ , QR ஆகிய பக்கங்களின் செங்குத்து இருசம கூறாக்கிகளை அமைத்து அவை சந்திக்கும் புள்ளியை **O** எனக்குறிக்க.

**(iv)** செங்குத்து இருசமகூறாக்கிகள் முறையே PQ , QR ஆகிய பக்கங்களை இடைவெட்டும் புள்ளிகளை முறையே S, T எனக்குறிக்க. O வை மையமாகவும் OS ஐ ஆரையாகவும் உடைய வட்டத்தை அமைத்து அதன் ஆரையை அளந்து எழுதுக.

**10.** இணைகரம் ABCD இல் DC இன் நடுப்புள்ளி K ஆகும். AD = DK , BC = CK ஆகும்.விடைத்தாளில் உருவைப்பிரதி செய்து,




**(i)** $B\hat{A}D$ , AK இனாலும் $A\hat{B}C$ , BK இனாலும் இரு சமகூறிடப்படுகின்றது எனக்காட்டுக.

**(ii)** $A\hat{K}B = 90°$ எனக்காட்டுக.

**(iii)** AD ற்கு சமாந்தரமாகவும் AB இல் X இருக்குமாறும் KX ஐ வரைக, ΔAKB இன் பரப்பளவு = $\frac{1}{2}$ ABCD இன் பரப்பளவு எனக்காட்டுக.

**11.** முக்கோணி PQR இல் பக்கம் PR இன் நடுப்புள்ளி S ஆகவும் $S\hat{P}Q = S\hat{R}Q$ ஆகவும் உள்ளது. உருவை விடைத்தாளில் பிரதி செய்து,




**(i)** ΔPQS , Δ SQR என்பன ஒருங்கிசையும் எனக்காட்டி QS ⊥ PR எனவும் காட்டுக.

**(ii)** பக்கம் PR ஐ **T** வரை நீட்டுக. $S\hat{Q}P = x$ எனக் கொண்டு $Q\hat{R}T$ ஐ $x$ இன் சார்பில் காரணம் தந்து துணிக.

**12.** **(a)** ε = {1, 2 , 3 , 4 , 5 , 6 , 7 , 8 , 9 , 10}

A = {3 , 6 , 9}

B = { 2 , 4 , 6 , 8 , 10}

**(i)** மேலே தரவுகளை வென்னுருவில் குறிக்க.

**(ii)** n (A′∩ B) காண்க.

**(b)** விளையாட்டுக் கழகம் ஒன்றில் உள்ள உறுப்பினர்களில் 25 பேர் கிரிக்கெட்டையும் 28 பேர் காற்பந்தையும் 8 பேர் இவ்விரண்டையும் விரும்புகின்றனர். இவ்விரண்டில் ஒன்றையேனும் விரும்பாதவர்கள் எவருமில்லை.

**(i)** தரவுகளை வென்னுருவில் குறிக்க.

**(ii)** இவ்விளையாட்டுக் கழகத்தில் உள்ள மொத்த உறுப்பினர்கள் எத்தனைப் பேர்?

**(iii)** காற்பந்தை விரும்பாதவர்களின் எண்ணிக்கையைக் காண்க.